பசுமை விகடன்

தேதி : 25.12.2011

# எதுவுமே செய்யாமல் ஆண்டுக்கு 5 லட்சம்

இந்தியாவில் மட்டுமல்ல இலங்கை, நேபாளம், இந்தோனேஷியா, கொரியா, தாய்லாந்து, தென் அமெரிக்கா என்று உலக நாடுகள் பலவற்றிலும் இப்போது தழைத்தோங்க ஆரம்பித்துவிட்டது ஜீரோ பட்ஜெட் தொழில்நுட்பம் இதன் வெற்றிச் சூத்திரத்தை நேரடியாகக் கண்டு உணர மேற்கண்ட நாடுகளில் இருந்து, 40 விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, கர்நாடக மாநிலத்துக்கு அனுப்பி வைத்தது சர்வதேச விவசாயிகள் அமைப்பு (La-Via-Campesina). நவம்பர் முதல் வாரத்தில் வந்து சேர்ந்த விவசாயிகள், ஹாசன் மாவட்டத்தில் காவிரியின் உபநதியான ஹேமாவதி நதிக்கரையிலிருக்கும் சிக்கமந்தகெரா கிராமத்தின் நந்தினி-ஜெயராம் ஜீரோ பட்ஜெட் பண்ணையைப் பார்வையிட்டனர். பன்னாட்டுக் குழுவினர், அடுத்ததாகச் சென்று இறங்கிய பண்ணூர் கிருஷ்ணப்பாவின் பண்ணையிலிருந்து அமேசான் காடுகளைப் போலக் காட்சியளித்தது. அந்தப் பண்ணை. நான்கு வருடங்களுக்கு முன்பு நான் சென்றிருந்த போது கரும்பு, வாழை என்று இருந்த இடம் அவற்றோடு சேர்ந்து இன்று அடர்ந்த வனமாக மாறி இருக்கிறது.

“மொத்தம் ஐந்து ஏக்கர் பூமி. 36 அடிக்கு 36 அடி என்ற அளவாக இதைத் தனித்தனிப் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டேன். ஒவ்வொரு பகுதியின் நான்கு மூலைகளிலும் ஒரு தென்னையை நட்டேன். தொடர்ந்து, ஒரு அடி இடைவெளியில் வரிசையாக பாக்கு, நாலரை அடி இடைவெளியில் வாழை, காபி, கோகோ, சாத்துக்குடி என மாற்றி மாற்றி

நடவு செய்தேன். காபியும், கோகோவும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பலன் கொடுத்து வருகின்றன. தென்னை தற்போது தான் பாளை போட்டிருக்கிறது. பாக்கு விளைச்சலும் தொடங்கி விட்டது. வாழைத்தாரின் எடை, வழக்கத்தைவிட ஒரு தாருக்கு 50 கிலோ வரை கூடியிருக்கிறது. சாத்துக்குடி மரத்தில் கிளைகள் ஒடியும் அளவுக்கு அதிகமான காய்கள் உள்ளன.

இவை அனைத்துக்கும் 15 நாட்களுக்கு ஒரு முறை ஜீவாமிர்தம் மட்டும்தான் கொடுக்கிறேன். இப்படிக் காடுகளைப் போல வளர்த்தால் விவசாயிகள், கோடீஸ்வரர் ஆகலாம். இது சத்தியம்" என்று சொன்ன கிருஷ்ணப்பாவின் குரலில் தெறித்த உறுதி, வந்திருந்த பன்னாட்டு விவசாயிகளை வியப்பின் உச்சிக்கே இட்டுச் சென்றது.

**கூடுதல் வருமானம் கொடுக்கும் கூட்டுப்பயிர்**

“ஒரு சமயத்தில் ஒரேயொரு பயிரைத்தான் சாகுபடி செய்வது வழக்கம். ஆனால், நான்கு பயிர்களை வளர்க்க முடியும் என்பதைப் பார்க்கும் போது தான் நாங்கள் செய்துவரும் தவறு புரிகிறது. இனி, எங்கள் நாட்டிலும் கூட்டுப்பயிர் சாகுபடிதான்" என்று கோரஸ் பாடினர், கொரியா மற்றும் தாய்லாந்து விவசாயிகள்.

அடுத்து நாங்கள் சென்றது. சோம்சேகர் என்பவரின் தோட்டத்துக்கு. ஜீரோ பட்ஜெட் முறையில் மல்பெரி வளர்த்து பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்து வருகிறார். பொறியியல் பட்டதாரியான சோம்சேகர். இவர், தோட்டத்தில் ஒரு பெரியத் தொட்டி, ஒரு சிறியத் தொட்டி என இரண்டு தொட்டிகளைக் கட்டி, இரண்டையும் குழாய் மூலம் இணைத்துள்ளார். பெரிய தொட்டியில் அனைத்துப் பண்ணைக் கழிவுகளையும் நிரப்பி அதன் மேல் மாட்டுச் சாணத்தைப் போட்டு அவ்வப்போது தண்ணீர் விடுகிறார். பண்ணைக்கழிவுகள் மட்கும்போது, அதன் சாறு, குழாய் மூலமாகச் சிறிய தொட்டியில்

நிரம்புகிறது. அதை ஒரு சிறிய மின் மோட்டார் மூலம் பாசனக் குழாயுடன் இணைத்துள்ளார். ஒவ்வொரு முறை நீர் பாய்ச்சும் போதும். பண்ணைக்கழிவுகளின் சாறும் வயலில் கலந்து விடுகிறது. அதோடு, 15 நாட்களுக்கு ஒரு முறை தனியாக ஜீவாமிர்தமும் கொடுப்பதால், மல்பெரி செடிகள் அடர்பச்சை நிறத்தில் செழுமையாக இருக்கின்றன.

**இயற்கைப்பட்டுக்குக் கூடுதல் விலை**

“வளர்ந்துள்ள இலைகளை, 45 நாட்களுக்கு ஒரு முறை வெட்டி, பட்டுப்புழுக்களுக்குக் கொடுக்கிறோம். புழு பராமரிப்புச் செலவைத் தவிர, மல்பெரி செடிகள் வளர்க்க உரச் செலவு, பூச்சிக்கொல்லிச் செலவு எதுவும் இல்லை. இயற்கை இலைகளை புழுக்கள் விரும்பி உண்பதால், கூடுகள் தரமாகவும், எடை கூடுதலாகவும் இருக்கின்றன. அதனால், கூடுதல் விலையும் கிடைக்கிறது” என்று சோம்சேகர் சொன்னதை, ஆர்வத்துடன் குறிப்பெடுத்துக் கொண்டனர், விவசாயிகள்.

**பாம்புகள் ஜாக்கிரதை**

சோம்கேரிடம் விடைபெற்று கிளம்பிய நாங்கள், அடுத்ததாக கொல்லேகால் அருகிலுள்ள கைலாசமூர்த்தியின் பண்ணையில் ஆஜரானோம். ‘நாய்கள் ஜாக்கிரதை’ என்று வைக்கப்பட்டிருந்த பலகையைப் பார்த்ததும் பலருக்கும் உதறலெடுக்கத் தொடங்கியது. அவர்களை ஆசுவாசப்படுத்திய கைலாசமூர்த்தி, “மண்புழுவைப் போல பாம்பும், விவசாயிகள் நண்பன்தான். எனது தோட்டத்தில் பாம்புகள் நிறைய இருப்பதால் திருடர்கள் மற்றும் எலித் தொந்தரவு கிடையாது. தோட்டத்துக்குள் நடக்கும்போது கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் போதுமானது. இது 6 ஏக்கர் பூமி. வழக்கம் போல, நானும் ரசாயன விவசாயம் செய்தவன்தான். எவ்வளவு பூச்சிக் கொல்லி அடித்தும்,

பூச்சிகளைக் கட்டுபடுத்த முடியவில்லை. அதனால் அப்படியே விட்டு விட்டு வங்கி வேலைக்குச் சென்று விட்டேன்.

**அறுவடை மட்டும்தான் வேலை**

பராமரிப்பு இல்லாததால், ஒரு வருடத்திலேயே நிலம் முழுக்கப் புதர் மண்டி விட்டது. அதனால், பாம்புகள் அதிகளவில் குடியேறி விட்டன. அதே நேரத்தில் தென்னையில் வழக்கத்தைவிட கூடுதல் மகசூலும், பெரிய காய்களும் கிடைக்க ஆரம்பித்தன. பொதுவாக, தாவரங்கள் தனக்கு வேண்டிய செடி, கொடிகளை மட்டுமே தன்னைச் சுற்றி வளர அனுமதிக்கும் என்பதால், காட்டில் மண்டிக் கிடப்பது களைகள் அல்ல நைட்ரஜன் தொழிற்சாலைகள் என்பதை உணர்ந்து கொண்டேன். 'இயற்கையை இம்சிக்காமல் இருந்தாலே நல்ல மகசூல் கிடைக்கும்போது எதற்காக ரசாயனத்தைப் பயன்படுத்த வேண்டும்". என்று அப்போதே முடிவு செய்து விட்டேன். அன்றிலிருந்து இங்கு நடக்கும் ஒரே வேலை அறுவடை மட்டும்தான்.

**இதுதான் இயற்கைச் சூத்திரம்**

களைகள் காய்ந்ததும் மண்ணோடு மண்ணாக மட்கி விடுகின்றன. பூமிக்குள் ஒரு மீட்டர் ஆழம் வரை செல்லும் இதன் வேர்களும் அப்படியே மட்குவதால், வேர் இருக்கும் இடம் வரை பூமியில் துளைகள் உண்டாகின்றன. இதனால் மண் பொலபொலப்படைகிறது. அதனுடன் கரிமங்குளம் கூடுவதால். மண் வளம் அடைந்து, விளைச்சல் கூடுகிறது. இதுதான் இதிலுள்ள சூத்திரம். எனது 6 ஏக்கர் பண்ணையில் எந்த வேலையும் செய்யாமல், வருடத்துக்கு 5 லட்சம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. எனது விவசாயம், 'எதுவும் செய்யாத எளிய விவசாயம்' (Do Nothing) என்றார்.

**இனி எல்லாமே இயற்கைத்தான்**

இதுபோன்ற பல பண்ணைகள், பல்வேறு அனுபவங்கள் என ஜீரோ பட்ஜெட் விவசாய முறைகளை தெளிவாகத் கற்றுக்கொண்ட வெளிநாட்டு விவசாயிகள், “ஆரம்பத்தில் மற்ற இயற்கை விவசாய முறைகளைப் போலத்தான் ஜீரோ பட்ஜெட் முறையும் இருக்கும். இதில் எந்தத் தனிச்சிறப்பும் இருக்கப் போவதில்லை என்றுதான் எங்களில் சிலர் நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால், இந்தப் பயணத்தில் பார்த்த, கேட்ட விஷயங்கள் அந்த எண்ணத்தையெல்லாம் மாற்றி விட்டன. இயற்கையின் மகத்துவமே மகத்துவம் இது தெரியாமல், ரசாயன உரங்களுக்கு அடிமையாகி இதுவரைக் கடனையல்லவாக் கட்டி அழுதிருக்கிறோம். இனி எல்லாமே இயற்கைத்தான்”. என்று ஆனந்தக் குரல் கொடுத்தனர்.

**ஊர்கூடி தேர் இழுப்போம்**

ஆராய்ச்சிப் பட்டங்கள் பலவற்றையும் பெற்றிருக்கும் மெக்ஸிகோ உயிரியல் அறிஞர் டாக்டர். பீட்டர் ரோசட், இலங்கை மட்டகளப்பு கிழக்கு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர்.அருள்நந்தி ஆகியோர், “எங்களது சர்வதேச விவசாய அமைப்பான ‘லா வியா கெம்பசினா’ மூலமாக தீவிர முயற்சி எடுத்து, இந்த விவசாய முறைகளைப் பரப்புவோம். எங்கள் நாடுகளின் அரசுகளுக்கும் அழுத்தம் கொடுப்போம்.

கடனிலிருந்து விவசாயிகளையும், விஷ உணவிலிருந்து மக்களையும் காக்க வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. இணைந்து செயலாற்றுவோம். வெற்றி பெறுவோம்” என்று சொல்ல, அனைவரும் அந்த வார்த்தைகளைத் திரும்பவும் சொல்லி உறுதிமொழி எடுத்தபடி தமது நாட்டை நோக்கி புறப்பட்டனர்.

**தொடர்புக்கு**

**கிருஷ்ணப்பா**

செல்போன்: 098805-87545

கைலாசமூர்த்தி

செல்போன்: 098801-85757

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன்